இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 226 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 14 – சனிக்கிழமை 28 மார்ச் 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 226 : Thiruvalluvar Year - 2057 - Panguni 14 - Saturday 28 March 2026 - Dak 8 Pages ₹ 5.00

### முதல்வரின் சீரிய நடவடிக்கை : மாநில கல்வி முறைக்குக் கிடைத்த அங்கீகாரம்: நாட்டிலேயே

# அரசுப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வகம் தமிழ்நாட்டில்தான் அதிகம்!

## ஒன்றிய அரசே வெளியிட்ட புள்ளி விவரத்தில் தகவல்!

சென்னை, மார்ச் 28-

**முதல்வரின் சீரிய நடவடிக்கையால் மாநில கல்வி முறைக்குக் கிடைத்த அங்கீகாரமாக; அரசுப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வகங்கள் நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகம் உள்ளன என்று ஒன்றிய அரசே வெளியிட்ட புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அதன் விவரம் வருமாறு:-

ஒன்றிய அரசு தேசிய கல்விக் கொள்கையை ஏற்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால், தமிழ்நாடு அரசு தனக்கென தனி கல்விக் கொள்கையை கடைப்பிடித்து வருகிறது. தேசிய கல்விக் கொள்கை, பிஎம்ஸ்ரீ போன்றவற்றை ஏற்க மறுப்பதால் தமிழ்நாட்டுக்கு கல்வி நிதி தராமல் ஒன்றிய அரசு தொடர்ந்து வஞ்சிப்பதை குற்றச்சாட்டுகளாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால், ஒன்றிய அரசின் கல்விக் கொள்கையை ஏற்றால் மட்டுமே நிதி தரப்படும் என ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர்கள் பலர் வெளிப்படையாகவே தெரிவித்து விட்டது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

**கல்வி உட்கட்டமைப்பை மேம்படுத்தும் தமிழ்நாடு அரசு!**

இருப்பினும், தமிழ்நாடு அரசு தொடர்ந்து கல்வி உட்கட்டமைப்பை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேம்படுத்தி வருகிறது. நடப்பு 2025 - 26 நிதியாண்டில் மட்டும் தமிழ்நாடு அரசு கல்வித்துறைக்கு ரூ.55,261 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இவ்வாறு தொடர்ந்து கல்வி நிதி ஒதுக்கீடு மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களால்தமிழ்நாட்டில்கல்விதொடர்ந்து மேம்பட்டு வருவதை ஒன்றிய அரசு புள்ளி விவரங்களே நிரூபிக்கின்றன.

சமீபத்தில் வெளியான 2023 - 24 கல்வியாண்டுக்கான ஒன்றிய கல்வியமைச்சக ஆய்வில், நாட்டிலேயே தமிழ்நாடு மாநில அரசுப் பள்ளிகளில் தான் அறிவியல் ஆய்வகங்கள் அதிகம் உள்ளன என்பது தெரிய வந்துள்ளது. தேசிய சராசரி 50.2 சதவீதம் என்றிருக்க, தமிழ்நாடு அரசு பள்ளிகள் 98.3 சதவீதம் அளவுக்கு மிக அதிக அறிவியல் ஆய்வகங்களை கொண்டுள்ளன என அந்தப் புள்ளி விவரம் தெரிவிக்கிறது.



**பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் கல்வி வளர்ச்சியின் அவலம்!**

ஏறக்குறைய கால் நூற்றாண்டாக பா.ஜ.க.வின் ஆளுகையில் இருக்கும் குஜராத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வகங்கள் 32 சதவீதம் மட்டுமே. இதைத்தான் குஜராத் மாடல் என்று சொல்லிச் சொல்லியே பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது. இதுபோல் பா.ஜ.க. ஆளும் அசாமில் 36 சதவீதம், திரிபுராவில் 28.2 சதவீதம், மணிப்பூரில் 27.9 சதவீதம், அருணாசல பிரதேசத்தில் 42.2 சதவீதம் மட்டுமே அரசு பள்ளிகளில் ஆய்வகங்கள் உள்ளன என ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

இதுபோல் மத்திய பிரதேசத்தில் 52.4 சதவீதம், உத்தரபிரதேசத்தில் 58.8 சதவீதம், அரியானாவில் 79 சதவீதம், பஞ்சாபில் 79.5 சததவீதம், உத்தரகாண்டில் 65.8 சதவீதம், இமாசல பிரேதசத்தில் 84.8 சதவீதம், லடாக்கில் 74.4 சதவீதம், ஜம்மு காஷ்மீரில் 63 சதவீதம், தெலங்கானாவில் 31.6 சதவீதம், ஆந்திராவில் 52.8 சதவீதம், கர்நாடகாவல் 48.9 சதவீத அரசு பள்ளிகளில் அறிவியல் ஆய்வகங்கள் உள்ளதாக அந்த ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. இதுபோல், கல்வியறிவு அதிகம் கொண்ட மாநிலமாகக் கருதப்படும் கேரளாவிலேயே 61.7 சதவீத அரசு பள்ளிகளில் தான் ஆய்வகங்கள் இருக்கின்றன என்பது அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**ஒன்றிய அரசின் நெருக்கடியால் மாநில அரசே நிதி ஒதுக்கீடு**

தேசிய கல்விக் கொள்கையை செயல்படுத்தினால் மட்டுமே நிதி வழங்கப்படும் என ஒன்றிய அரசு தரப்பில் திட்டவட்டமாக கூறப்பட்டு வருகிறது. மேலும் தேசிய கல்விக் கொள்கையை அமலாக்காததால் சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் ரூ.2,152 கோடி நிதி தமிழ்நாட்டுக்கு விடுவிக்காமல் நிறுத்தி வைத்துள்ளது. இதன் காரணமாக தமிழ்நாடு அரசே சொந்த நிதியில் இருந்து கல்வித் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. அரசுப்பள்ளி மாணவர்களின் உயர் கல்வியை ஊக்குவிக்கவும், பள்ளிகளின் தரத்தை உயர்த்தவும் நிதி நிலைமை நெருக்கடிக்கு இடையிலும் தமிழ்நாடு அரசு கல்விக்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**நாட்டிலேயே தமிழ்நாடு நம்பர் 1**

தமிழ்நாடு அரசு கல்வி மேம்பாட்டில் தனி கவனம் செலுத்தி வருகிறது. இதனால் கல்வித்துறையைப் பொறுத்தவரை தமிழ்நாடு நம்பர் எந்த மாநிலத்தையும் ஒப்பிட முடியாத அளவுக்கு நாட்டிலேயே நம்பர் ஒன் மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. டாப் பட்டியலில் நாட்டில் மொத்தம் 926 உயர் கல்வி நிறுவனங்கள் இருப்பதாக ஒன்றிய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த அமைச்சகம் வெளியிட்ட தரவுகளின்படி டாப் கல்வி நிறுவனங்கள் வரிசையில் மாநிலம் வாரியாக கல்வி நிறுவனங்கள் பட்டியல் வருமாறு:-

கல்வித்துறையை பொறுத்தவரை எந்த மாநிலத்தையும் ஒப்பிட முடியாத அளவுக்கு நாட்டிலேயே நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. நாட்டில் மொத்தம் 926 உயர் கல்வி நிறுவனங்கள் உள்ள நிலையில், அதிகபட்சமாக தமிழ்நாட்டில் மட்டும் 165 உயர்கல்வி நிறுவனங்கள் உள்ளன. தமிழ்நாட்டிற்கு அடுத்தபடியாக டெல்லியில் 88, மகாராஷ்டிராவில் 80, கர்நாடகாவில் 78 உயர் கல்வி நிறுவனங்கள் உள்ளன. பா.ஜ.க., ஆளும் உத்தரப்பிரதேசத்தில் 71, குஜராத்தில் 29, அசாமில் 15 உயர்கல்வி நிறுவனங்கள் மட்டுமே உள்ளன.



> **“கல்வித்துறையை பொறுத்தவரை எந்த மாநிலத்தையும் ஒப்பிட முடியாத அளவுக்கு நாட்டிலேயே நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. நாட்டில் மொத்தம் 926 உயர் கல்வி நிறுவனங்கள் உள்ள நிலையில், அதிகபட்சமாக தமிழ்நாட்டில் மட்டும் 165 உயர்கல்வி நிறுவனங்கள் உள்ளன. தமிழ்நாட்டிற்கு அடுத்தபடியாக டெல்லியில் 88, மகாராஷ்டிராவில் 80, கர்நாடகாவில் 78 உயர் கல்வி நிறுவனங்கள் உள்ளன. பா.ஜ.க., ஆளும் உத்தரப் பிரதேசத்தில் 71, குஜராத்தில் 29, அசாமில் 15 உயர்கல்வி நிறுவனங்கள் மட்டுமே உள்ளன.”**

ஒன்றியத்திலும் மாநிலத்திலும் இரட்டை இன்ஜின் அரசு என கூறிக்கொள்ளும் பாஜ ஆட்சி குஜராத் ராஜஸ்தான் , திரிபுரா, மணிப்பூர்,அசாம் அருணாசல பிரதேசம் மாநிலங்களில் இருந்த போதிலும் அங்கு பள்ளிகளில் உள்கட்டமைப்புகள் மேம்படவில்லை என்பது, பா.ஜ.க. ஆட்சியின் அவல நிலையை காட்டுவதாக கல்வியாளர்கள் பலர் தெரிவிக்கின்றனர்.

**கல்வி மேம்பாட்டுக்கு முதல்வரின் சீரிய முயற்சி!**

கடந்த ஐந்தாண்டில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சியினால்,

★ பள்ளிக்கல்வி மேம்பட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கல்வித் துறைக்கு 2025--26ம் நிதியாண்டில் சுமார் ரூ.55,261 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, பள்ளிக்கல்வி, உயர்கல்வி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளித்துள்ளது. பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டு திட்டம் மூலம் 5 ஆண்டுகளில் ரூ.7,500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான உயர் கல்வி நிதியுதவி போன்ற முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

★ பள்ளி உள்கட்டமைப்பு: பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டு திட்டம் மூலம் 18,000 புதிய வகுப்பறைகள், கணினி ஆய்வகங்கள் மற்றும் ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கப்படுகின்றன.

★ உயர்கல்விக்கு ஆதரவு: அரசுப்பள்ளிகளில் பயின்று உயர்கல்வி சேரும் மாணவர்களுக்கு கல்விக்கட்டணம் மற்றும் பிற செலவுகளை அரசே ஏற்கும்.

★ புதுமைப் பெண் திட்டம்: உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ1,000 வழங்கும் திட்டம் தொடர்ந்து நடைமுறையில் உள்ளது.

★ தொழிற்கல்வி: 11 மற்றும் 12ம் வகுப்புகளில் தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் அளித்து நிதி உதவி வழங்கப்படுகிறது.

மேற்கண்டவாறு ஒன்றிய அரசின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

### கல்வி மேம்பாட்டுக்கு கழக அரசின் நடவடிக்கை!

**கடந்த ஐந்தாண்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சியினால், பள்ளிக்கல்வி மேம்பட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கல்வித் துறைக்கு 2025-26ம் நிதியாண்டில் சுமார் ரூ.55,261 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, பள்ளிக்கல்வி, உயர்கல்வி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளித்துள்ளது. பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டு திட்டம்மூலம் 5 ஆண்டுகளில் ரூ.7,500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான உயர் கல்வி நிதியுதவி போன்ற முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன.**

---

### திட்டத்தை ஒன்றிய அரசு சரியாகச் செயல்படுத்தாததால்தான்

# எரிவாயு தட்டுப்பாடு கடுமையாகியுள்ளது !

## காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மார்ச் 28-

ஒன்றிய பா.ஜ.க., அரசின் தற்சார்பு இந்தியாவில் இயற்கை எரிவாயு திட்டம் பெயரளவுக்கு தான் செயல்பட்டுக் கொண்டிருப்பதாக காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில்,

ஒன்றியத்தில் பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க., அரசு அமைந்தது முதல் அண்டை நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் மற்றும் எல்.பி.ஜி., இறக்குமதி செய்வது அதிகரித்து கொண்டே செல்கிறது என்று குற்றம்சாட்டியுள்ளார். அதன்படி கச்சா எண்ணெய் இறக்குமதி 90 சதவிகிதமாகவும், எல்.பி.ஜி. இறக்குமதி 62 சதவிகிதமாகவும் உயர்ந்திருக்கிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

தற்சார்பு, அனைத்திலும் தன்னிறைவு எனக் கூறி கொள்ளும் ஒரு நாட்டில் இப்படிதான் இருக்குமா என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். ஒன்றிய பா.ஜ.க., அரசின் தற்சார்பு இந்தியாவில் இயற்கை எரிவாயு திட்டம் பெயரளவுக்கு தான் செயல்பட்டு கொண்டிருப்பதாகவும், இத்திட்டம் தெளிவற்றதாக உள்ளது என்றும் ஜெய்ராம் ரமேஷ் விமர்சித்துள்ளார்.

இயற்கை எரிவாயு திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டிருந்தால், தற்போதைய எரிவாயு தட்டுப்பாடு நிலை ஏன் வந்திருக்க போகிறது என்று அவர் வினவியுள்ளார்.

பிரம்மாண்ட அறிவிப்புகளை வெளியிட்டால் மட்டும் போதாது, அத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு ஜெய்ராம் ரமேஷ் அறிவுறுத்தியுள்ளார்.

---

### பா.ஜ.க. ஆளும்

# சத்தீஸ்கர் மாநிலச் சிறைகளில் 285 கைதிகள் உயிரிழப்பு!

## தேசிய மனித உரிமைகள் ஆணையம் விசாரணை!

சத்தீஸ்கர், மார்ச் 28-

பா.ஜ.க. ஆளும் சத்தீஸ்கர் மாநிலச் சிறைகளில் 285 கைதிகள் உயிரிழப்பு காரணமாக தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை மேற்கொண்டுள்ளது.

பா.ஜ.க. ஆளும் சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள சிறைகளில் 285 கைதிகள் உயிரிழந்த விவகாரம் குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

சத்தீஸ்கர் மாநிலத்தில் முதல்வர் விஷ்ணு தியோ சாய் தலைமையிலாள பா.ஜ.க. ஆட்சி நடைபெற்று வருகிறது.

கடந்த 13 மாதத்தில் மட்டும் சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள சிறைச்சாலைகளில் 66 கைதிகள் உயிரிழந்த விவகாரத்தை முன்வைத்து, அந்த மாநில சட்டமன்றத்தில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர்.

மேலும், கடந்த வாரம் ஊடகம் ஒன்றில் வெளியான செய்தியில், சத்தீஸ்கர் சிறைகளில் அளவுக்கு அதிகமான கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் கைதிகளுக்கு நோய்த் தொற்று வேகமாகப் பரவுவதற்கும், சில கைதிகளுக்கு மனஅழுத்தம் ஏற்படுவதற்கும் வாய்ப்புள்ளதாகவும், கைதிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு சிறையில் போதிய அளவில் மருத்துவர்களோ, மனநல மருத்துவர்களோ இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள சிறைகளில் 285 கைதிகள் உயிரிழந்த விவகாரம் குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளது. இதுகுறித்து விளக்கம் அளிக்குமாறு சத்தீஸ்கர் மாநில அரசுக்கும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.